V.NAGAII

**V10T**

விருதுநகர் மாவட்டம்

காலாண்டு பொதுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 10

கால அளவு: 3.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **15×1=15**

1) **'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'** நிலத்துக்கு நல்ல உரங்கள், அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ...........
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ..........
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

3) காலில் அணியும் அணிகலன்களைக் குறிப்பது ..........
அ) சுட்டி ஆ) கிண்கிணி இ) குழை ஈ) சூழி

4) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையை ..........
அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல் பாடிய
இ) கேட்டவர் பாடிய ஈ) பாடல் கேட்டவர்

5) 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ..........
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

6) காசிக்காண்டம் என்பது ..........
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

7) செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் சூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே
செய்தி 3 - இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

8) திருக்குறளில் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் ........
அ) 35 ஆ) 70 இ) 38 ஈ) 25

9) உவப்பின் காரணமாக அஃறிணையை உயர்திணையாகக் கொள்வது ..........
அ) இடவழுவமைதி ஆ) பால் வழுவமைதி
இ) திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி

10) இரவீந்திரநாத் தாகூர் ............. மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை .......... மொழியில், மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது.
அ) ஆங்கில, வங்காளம் ஆ) வங்காள, ஆங்கில
இ) வங்காள, தெலுங்கு ஈ) தெலுங்கு, ஆங்கில

11) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் ..........
அ) தேவநேயப் பாவாணர் ஆ) இளங்குமரனார்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) பாரதியார்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*'விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்'*

12) விசும்பு என்ற சொல்லின் பொருள் .........
அ) யுகம் ஆ) கடல் இ) வானம் ஈ) மேகம்

13) இப்பாடலில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக
அ) கரு - உரு ஆ) ஊழி - ஊழியும்
இ) ஊழ் - ஊழ் ஈ) ஊழியும் - ஊழியும்

14) இப்பாடலை இயற்றியவர் ..........
அ) குமரகுருபரர் ஆ) கண்ணதாசன் இ) பெருஞ்சித்திரனார் ஈ) கீரந்தையார்

15) இப்பாடல் இடம் பெறும் நூல் ..........
அ) நீதி வெண்பா ஆ) பரிபாடல்
இ) காசிக்காண்டம் ஈ) திருவிளையாடல் புராணம்

## பகுதி - II (மதிப்பெண்: 18)

### பிரிவு - I

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** **4×2=8**
**21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க**

16) விடைக்கேற்ற வினா அமைக்க:
அ) உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம் பெற்றுள்ளது
ஆ) அமெரிக்காவின் மின் சோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழையிலை விருந்து விழா' வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது

17) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக

18) இவ்வுலகம் நமக்கு உரிமை உடையதாக வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டியதை எழுதுக

19) மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக

20) சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக

21) **'அறிவு'** என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக

### பிரிவு - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** **5×2=10**

22) வினைமுற்றை வினையாலணையும் பெயரக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக
அ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்
ஆ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்

23) கட்டுரை படித்த - இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக

24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக**
அ) மலை - மாலை ஆ) விதி - வீதி

25) **பழமொழிகளை நிறைவு செய்க**
அ) உப்பிலாப் ..........
ஆ) உப்பிட்டவரை ............

26) அமர்ந்தான் - உறுப்பிலக்கணம் தருக

27) 'சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்' என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக

28) **கலைச்சொல் தருக.**
அ) Tornado ஆ) Culture

## பகுதி - III (மதிப்பெண்: 18)

### பிரிவு - I

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க** **2×3=6**

29) உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ........... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் .......... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக

30) 'இன்மையிலும் விருந்தோம்பல்' குறித்துப் புறநானூற்றுப் பாடல் தரும் செய்தியை எழுதுக.

31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக**

ஒரு நாட்டின் வளமும் அங்கு வழங்கும் சொற்களின் வளமும் தொடர்புடையன என்கிறார் பாவாணர்

நாட்டுவளம், சொல்வளத்தை உருவாக்குகிறது. சொல்வளம் நாட்டுவளத்தை உணர்த்துகிறது. எடுத்துக்காட்டாக, இலைக்குத் தரப்பட்டுள்ள பல பெயர்களைச் சொல்லலாம்.

இலையின் வன்மை, மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டு தாள், ஓலை, தோகை, இலை எனத் தமிழில் பலவகைப் பெயர்கள் அமைந்திருக்கின்றன. ஆனால், ஆங்கில மொழியில் இலையைக் குறிக்க **leaf** என்னும் ஒரு சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

அ) ஆங்கில மொழியில் இலையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் எது?

ஆ) ஒரு நாட்டின் வளமும் அங்கு வழங்கும் சொற்களின் வளமும் தொடர்புடையன என்று கூறியவர் யார்?

இ) இலையின் வன்மை, மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டு தமிழில் அமைந்திருக்கின்ற பல்வகைப் பெயர்களைக் கூறுக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க** **2×3=6**

**34 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க**

32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக

34) **அடிபிறழாமல் எழுதுக**

அ) 'அன்னை .......... எனத் தொடங்கி பேரரசே! என முடியும் 'அன்னை மொழியே' பாடல்

**(அல்லது)**

ஆ) புண்ணியப் புலவீர் .......... எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணம் பாடல்

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க** **2×3=6**

35) ஏதேனும் இரண்டு வழுவமைதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக

36) உவமையணியைச் சான்றுடன் விளக்குக

37) வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய பாடலைப் பாடிக் காட்டினார். இதை மாணவர்கள் கவனமாகக் கேட்டுப் பாடினர். மாணவர்கள் கேட்ட பாடலில் இருந்து ஆசிரியர் சிறு வினாக்களைக் கேட்டார். இப்பாடல் குறித்த உங்கள் கருத்துகளை எழுதி வாருங்கள். நன்றாக எழுதுபவருக்குப் பரிசு உள்ளது என்றும் ஆசிரியர் கூறினார். அடிக்கோடிட்ட சொற்களுக்கான தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிக.

## பகுதி - IV (மதிப்பெண்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **5×5=25**

38) அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக

**(அல்லது)**

ஆ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக

'கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைய‌த் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானும் அறிந்தவை; அறிக! - கண்ணதாசன்

39) அ) மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக**



41) **கொடுக்கப்பட்ட பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப் படிவத்தை நிரப்புக**

விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் கதவு எண் 11/378 மாருதி நகரில் வசிக்கும் கண்ணன் என்பவரின் மகன் மணி (25 வயது) என்பவர் அலுவலக எழுத்தர் பணிக்கு விண்ணப்பிக்கிறார். கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக

42) அ) **மொழிபெயர்க்க**

Translation is an art in itself. No one can do that. A translator should be neutral and not attached to any language. Specifically, he should be proficient in both the languages i.e. both the language and the source language. They should be familiar with the social and cultural conditions of both the languages

**(அல்லது)**

ஆ) இன்சொல் வழியின் நன்மைகளையும் தீயசொல் வழியின் தீமைகளையும் பட்டியலிடுக.

**பகுதி - V (மதிப்பெண்: 24)**

***அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க*** **3×8=24**

43) அ) நாட்டுவளமும் சொல் வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழி நின்று விளக்குக

**(அல்லது)**

ஆ) சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுடன் விளக்குக.

44) அ) 'பிருமம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45) அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **குறிப்புகளைப் பயன்படுத்தி மதிப்புரை எழுதுக**

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக

குறிப்புகள்: நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.

- - - - - - -